OS.No.393/2023

PW 1–பாலாஜி

த/பெ.சித்தராஜ்

நாள். 17.02.2025.

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதியின் வீட்டுமனை விற்பனை திட்டத்தின் 60 மாத கால தவணை திட்டத்தில் நான் சேர்ந்து இருந்தேன் என்றால் ஆமாம். நான் தொடர்ந்து பணம் கட்டி வந்து கொண்டிருந்தேன் என்றாலும் சரி. 27.1.2016 அன்று நானும் பிரதிவாதியும் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் போட்டுக் கொண்டோம் என்றாலும் சரி. அந்த கிரைய ஒப்பந்தத்தில் அதற்கு முன்னிட்டு நான் செலுத்திய தொகைகளை அந்த கிரைய ஒப்பந்தத்தில் எழுதவில்லை என்றால் சரி. அன்றைய தேதியில் நான் ஒப்பந்தம் போடும்போது ஒரு லட்சம் ரூபாய் கட்டியிருந்தேன். மீதி தொகையை 10 மாதங்களுக்குள் கட்ட வேண்டும் என்றுதான் ஒப்பந்தம் என்று சொன்னால் சிறுக சிறுக கட்ட சொல்லி இருந்தார் கட்டினேன்.

2. 5.2.2018 தேதி அன்று தான் நான் ரூபாய் 2 லட்சத்து 21 ஆயிரம் கட்டியிருந்தேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை கிரையம் செய்து தருவதற்கு பிரதிவாதி மருத்து வருகிறார் என்றுதான் வாதிட்டு வருகிறேன் என்றால் ஆமாம். அதன் பின்னே நான்கு வருடங்களாக நான் கிரயம் செய்ய தயாராக இருந்தேன் என்பதை நிரூபிக்க நான் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கம் செய்யவில்லை என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன்.

3. 10.12.2022 அன்று தான் நான் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் நான்கு வருடங்கள் கழித்து தான் அறிவிப்பை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். அதற்கு பிரதிவாதி வா.சா.ஆ.6 பதில் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்.

4. 19.12.2022 நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு தயாராக இருந்தேன் என்பது நிரூபிக்க எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால் நான் போட்டோ தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன். நான் கால வரம்பு கடந்து தான் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

5. இந்த வழக்கில் நான் கோரி இருக்கும் ஏற்றுதை ஆற்றுக பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி இல்லை வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் எப்போதும் பணம் கொடுத்து பதிவு செய்ய தயாராக தான் இருந்தேன்.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.